Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 03, 2025

புதன்கிழமை 03, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர் 042 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



## “இனவெறி அரசியலை மீண்டும் அனுமதியோம்”

வடக்கிற்கு மீண்டும் உயிர் கொடுத்து மக்களுக்கு வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான தனது பொறுப்பை நிறைவேற்றுவேன் என்று தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தேவையான முடிவுகள் தயக்கமின்றி எடுக்கப்படும் என்பதுடன் இனவெறி அரசியலை மீண்டும் அனுமதிக்க மாட்டோம் என்றார்.

இங்குள்ளவர்களின் வாழ்க்கையில் பெரும் பகுதி போருடன் கழிந்தது. முப்பது வருடங்களாக நாம் ஒருவருக்கொருவர் அவநம்பிக்கையுடனும் சந்தேகத்துடனும் போராடினோம். அது நம் நாட்டில் நடந்த ஒரு பெரிய சோகம். இதன் காரணமாக, நம் நாட்டு மக்கள் அந்நியப்படுத்தப்பட்டனர். இதன் காரணமாக, இனவெறி அரசியல் தோன்றியது.

வடக்கு மற்றும் தெற்கில் அதிகாரத்தைப் பெறுவதற்கு இனவெறி முக்கிய கருவியாக மாறியது. அந்த நிலைமை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டது. இந்த நாட்டில் இனவெறி அரசியலை மீண்டும் அனுமதிக்க மாட்டோம். மக்களாகிய நீங்கள் இந்த இனவெறி அரசியலை நிராகரிக்க வேண்டும் என்றும் நான் நம்புகிறேன். ஒற்றுமையை உருவாக்குவதே எங்கள் அரசாங்கத்தின் நோக்கம். சர்ச்சைக்கு வழிவகுக்கும் முடிவுகளை எடுக்க நாங்கள் சிறிதும் பயப்படவில்லை. மேலும், பழைய அழிவுகரமான இனவெறி சத்தங்கள் நாம் எடுக்கும் முற்போக்கான நடவடிக்கைகளை மாற்றியமைக்க அனுமதிக்க மாட்டோம் என்றார்.

தொடர்ச்சி P2

## லிட்ரோ அதிரடி அறிவிப்பு

செப்டெம்பர் மாதத்திற்கான உள்நாட்டு எரிவாயு விலையில் எந்த திருத்தமும் இருக்காது என்று லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட், செவ்வாய்க்கிழமை (02) அன்று அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 3,690ஆகவும், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 1,482ஆகவும் இருக்கும்.

2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 694ஆகவும் மாறாமல் உள்ளது என்று நிறுவனம் உறுதிப்படுத்தியது.

தொடர்ச்சி P2




## “அழைத்தால் செல்வேன்”



ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டிற்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டால், கட்சியினருடன் கலந்துரையாடி பின்னர் அங்கு செல்வேன் என்று ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான உத்தியோகபூர்வை அழைப்பையும் இதுவரையிலும் பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு கொழும்பு கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில், எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## சுற்றுலாப் பயணிகளுக்காக கச்சதீவு திறக்கப்படுமா?



நெடுந்தீவு மற்றும் கச்சதீவை இணைக்கும் உத்தேச சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் குறித்த சாத்தியக்கூறு ஆய்வு நடைபெற்று வருவதாக மீன்வளம், நீர் வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் திங்கட்கிழமை (01) அன்று கச்சத்தீவுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டபோது அமைச்சர் இந்த கருத்துக்களைத் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஞாயிற்றுகளில் ‘காலை’ தடை



மாத்தறை நகரில் ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தில் அறநெறிப் பாடசாலை கல்விக்காக, பிரத்தியேக வகுப்புகளைத் தடை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று குழந்தைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

முதலாம் ஆண்டு முதல் க.பொ.த. சாதாரண தரம் வரையிலான வகுப்புகளுக்கான பிரத்தியேக வகுப்புகள், ஞாயிற்றுக்கிழமை காலை நேரத்தில் தடை செய்யப்படும் இந்த நடவடிக்கையைச் செயல்படுத்துமாறு மாத்தறை நகரசபைக்கு அமைச்சர் பணித்தார்.

தொடர்ச்சி P2

## போலி வேலை மோசடி குறித்து எச்சரிக்கை

குறைந்த வேலைக்கு அதிக சம்பளம் வழங்குவதாக உறுதியளிக்கும் போலி வேலை மோசடிகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு (SLCERT) எச்சரித்துள்ளது.

இருப்பினும், மோசடி செய்பவர்கள் ஒன்லைன் விளம்பரங்கள் மூலம் தனிநபர்களைக் குறிவைத்து, பெரும்பாலும் போலி வேலை வாய்ப்புகளுக்கு பதிவு கட்டணம் அல்லது வைப்புத்தொகையை கோருகின்றனர் என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.

வேலை மோசடிகளை எவ்வாறு அடையாளம் கண்டு தவிர்ப்பது என்பது குறித்து மக்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக SLCERT ஒரு சமூக ஊடக பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

### துரித நடவடிக்கை மேற்கொள்ளாவிடின்

## “காலநிலை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்”



துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் இலங்கை கடுமையான காலநிலை பேரழிவுகளை சந்திக்க நேரிடும். 2060 ஆம் ஆண்டாகும்போது நெல் விளைச்சல் 12-41% இனால் வீழ்ச்சியடையும். 2050 ஆம் ஆண்டாகும்போது மீன் விளைச்சல் 20% இனால் வீழ்ச்சியடையும். வருடாந்த உட்கட்டமைப்பு வசதிகளின் இழப்புகள் 0.38 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஒரேயொரு மெசேஜ்




இலஞ்சம் மற்றும் ஊழல் சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் எளிதாக முறைப்பாடு செய்யும் வகையில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, 077 777 1954 என்ற புதிய வாட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

முறைப்பாட்டுச் செயல்முறையை விரைவாகவும் வசதியாகவும் மாற்றுவதே இந்தப் புதிய முறையின் நோக்கமாகும் என்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்து ரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## திடீர் சுற்றிவளைப்பில் பல பொருட்களை அள்ளினர்



புறக்கோட்டையில் நடத்தப்பட்ட தொடர் சோதனைகளின் போது, அங்கீகரிக்கப்படாத அழகுசாதனப் பொருட்கள் மற்றும் முறையற்ற லேபிளிடப்பட்ட உணவுப் பொருட்களை நுகர்வோர் விவகார அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

பல விற்பனை நிலையங்களில் அங்கீகரிக்கப்படாத வெண்மையாக்கும் கிரீம்கள் மற்றும் பதிவு செய்யப்படாத அழகுசாதனப் பொருட்கள் சோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டன,

தொடர்ச்சி P2

## “நான் வேண்டாம் என்றேன்”: “அவர்கள் வேண்டும் என்றனர்”

### சந்தேக நபர்கள் கற்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்

ஒரு DJ விருந்தில் தனது காதலனுடன் நடனமாடியபோது, 31 வயது ஸ்பானிஷ் பெண்ணை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்து தாக்கியதாகக் கூறப்படும் சுற்றுலா வழிகாட்டிகள் மூவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கற்பிட்டி குடாவ பகுதியில் ஒகஸ்ட் 30ஆம் திகதி நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கற்பிட்டியின் கண்டகுளிய பகுதிக்கு தனது காதலனுடன் வந்த பெண், அருகிலுள்ள ஹோட்டலில் நடந்த DJ நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “கச்சத்தீவை விடமாட்டோம்”

இலங்கையின் இறையாண்மை எந்த வகையான வெளிப்புற அழுத்தத்தாலும் சமரசம் செய்யப்பட மாட்டாது என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்,

கச்சத்தீவுக்கு திங்கட்கிழமை (01) மாலை விஜயம் செய்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் - மயிலிட்டியில் உரையாற்றியபோதே அவர் இதனை குறிப்பிட்டார். இலங்கை ஜனாதிபதி ஒருவர் கச்சத்தீவுக்கு சென்றுள்ளமை முதலாவது சந்தர்ப்பமாகும்.

தொடர்ச்சி P2




### சூடான் நிலச்சரிவில் புதைந்த கிராமம்

## 1,000 பேர் உயிரிழப்பு

### ஒருவர் மட்டும் உயிர் தப்பினார்

சூடான் நாட்டின் டார்பர் மலைப்பகுதியில் கனமழையால் ஏற்பட்ட கடும் மண்சரிவில் சிக்கி 1,000த்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## “மஹிந்தவை சிறையில் அடைக்க வேண்டும்"



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், ராஜபக்ஷவின் 2010 ஆட்சிக் காலத்திலேயே கடுமையான ஊழல்கள் இடம்பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## லிட்ரோ அதிரடி அறிவிப்பு

நடைமுறையில் உள்ள எரிவாயு விலை நிர்ணய பொறிமுறையின் கீழ் நிறுவனத்தின் வழக்கமான மாதாந்திர விலை மதிப்பாய்வைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.




## சுற்றுலாப் பயணிகளுக்காக கச்சதீவு திறக்கப்படுமா?



கச்சத்தீவு பகுதியில் செயல்படும் உள்ளூர் மீனவர்களின் பாதுகாப்பு, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வரவிருக்கும் மேம்பாட்டு முயற்சிகள் குறித்து கடற்படையுடன் கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே பார்வையாளர்களை ஈர்க்கும் நெடுந்தீவு முதல் கச்சத்தீவு வரை சுற்றுலா வளர்ச்சியை விரிவுபடுத்தும் திட்டங்கள் உட்பட, பிராந்தியத்தில் சுற்றுலாவை மேம்படுத்தப் பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளனர்.

## திடீர் சுற்றிவளைப்பில் பல பொருட்களை அள்ளினர்

இது நுகர்வோருக்கு கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்தக்கூடியது என சுற்றவளைப்பில் ஈடுபட்டிருந்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சரியான லேபிளிங், காலாவதி திகதிகள் அல்லது மூலப்பொருள் விவரங்கள் இல்லாத இறக்குமதி செய்யப்பட்ட சாக்லேட்டுகளின் பாரியளவிலான இருப்புகளைக் கண்டறியவும் இந்த திடீர் சோதனை வழிவகுத்தன இது நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்களை மீறுவதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

நுகர்வோரைப் பாதுகாக்கவும், பாதுகாப்பான, உண்மையான மற்றும் சட்டப்பூர்வமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மட்டுமே சந்தையில் கிடைப்பதை உறுதி செய்யவும் நாடு தழுவிய ரீதியில் திடீர் சுற்றவளைப்புகள் தொடரும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான அல்லது பாதுகாப்பற்ற தயாரிப்புகளை நுகர்வோர் அதிகார சபையின் ஹாட்லைன் 1977 மூலம் தகவல் தருமாறு பொதுமக்களிடம் அதிகாரசபை கேட்டுக்கொண்டுள்ளது.

## "மஹிந்தவை சிறையில் அடைக்க வேண்டும்"

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அடுத்தடுத்து வந்த இலங்கைத் தலைவர்களையும் விமர்சித்துள்ளார்.

அவர்களுக்கு தேசிய வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளையும் சரத் பொன்சேகா விமர்சித்துள்ளார். அவருடைய கைது விடயத்தில் நடப்பு அரசாங்கம் மேற்கொண்ட முன்னுதாரணத்தை தாம் ஏற்றுக்கொள்வதாக பொன்சேகா கூறியுள்ளார். அந்த முன்னுதாரணத்தின் அடிப்படையில், ராஜபக்ஷ போன்ற ஒருவருக்கு சுமார் 400 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

# "இனவெறி அரசியலை மீண்டும் அனுமதியோம்"

உலக தேங்காய் தின கொண்டாட்டங்களுடன் இணைந்து புதுக்குடியிருப்பு நகரில் செவ்வாய்க்கிழமை(02) காலை நடைபெற்ற வடக்கு தேங்காய் முக்கோணத்தின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து ஒரு படி முன்னோக்கி காலை வைத்த மக்களின் வெற்றிக்காக வடக்கிற்கு புதிய பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க எதிர்காலத்தில் தொழில்துறை வலயங்கள் உட்பட பல மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மக்களின் நில உரிமைகள், மொழி மற்றும் கலாச்சார உரிமைகள் மற்றும் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமையைப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார். நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும், தேவையான முடிவுகள் தயக்கமின்றி எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைகளின் பேரில், பருத்தித்துறை, சிலாவத்துறை, கொக்கிலாய் ஆகிய மூன்று நகரங்களை இணைத்து, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கியதாக, வடக்கு தென்னை முக்கோணம் நிறுவப்பட்டது. இதன் கீழ், 2025 ஆம் ஆண்டுக்குள் வடக்குப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரும் தென்னை நாற்றுகளை வழங்கவும், 16,000 ஏக்கர் புதிய தென்னை நிலங்களை பயிரிடவும், அந்த நிலங்களை மேம்படுத்தவும் கடந்தவரவு-செலவுத்திட்டத்தில் ரூ. 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

2025 முதல் 2027 வரையிலான மூன்று ஆண்டுகளுக்குள் நிலப்பரப்பை 40,000 ஏக்கராக அதிகரிப்பதன் மூலம், வட மாகாணத்தில் தென்னை தொழில்களை நிறுவுவதன் மூலமும், தேங்காய் தொடர்பான பொருட்களின் ஏற்றுமதியிலிருந்து ஆண்டுதோறும் 70 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை அதிகரிப்பதன் மூலமும் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வட மாகாணத்தின் 05 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தென்னை விவசாயிகளுக்கு அரசாங்க மானியங்களுக்கான உரிமைப் பத்திரங்களையும் ஜனாதிபதி வழங்கினார்.

2025 உலக தெங்கு தின கொண்டாட்டத்திற்காக தொகுக்கப்பட்ட சஞ்சிகை ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது, அதே நேரத்தில், சர்வதேச தெங்கு சமூகத்தின் துணை இயக்குநர் நாயகம் திரு. நுவன் சிந்தக, சர்வதேச தெங்கு சமூகத்தின் இலங்கைக்கான பாராட்டுச் சான்றிதழை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் வழங்கினார்.

விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேலும் கூறியதாவது, இந்த புதுக்குடியிருப்பு பகுதி கடந்த காலங்களில் ஒரு பெரிய மோதல் பகுதியாக இருந்து வருகிறது என்பதை நாங்கள் அறிவோம். அந்த மோதல்கள் காரணமாக, இந்த பகுதி மக்கள் அனைத்தையும் இழந்தனர். கடந்த தேர்தலின் போது இந்த பகுதி மக்களை நான் சந்தித்தேன். இந்த அழிவுக்குள்ளான பகுதிக்கும் அதன் மக்களுக்கும் நாம் மீண்டும் உயிர் கொடுக்க வேண்டும். குறிப்பாக கடந்த தேர்தல்களின் போது, இந்த பகுதிகளில் வாழும் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து ஒரு வலுவான படியை எடுத்தனர். எங்கள் மீது நம்பிக்கை வைத்து ஒரு படி முன்னேறிய மக்களை வெற்றிக்கு இட்டுச் செல்வதே எங்கள் நம்பிக்கை.

அதற்காக, பல பகுதிகளில் பணிகளைத் தொடங்கியுள்ளோம். முதலில், இந்த மக்களின் உரிமைகளை உறுதி செய்ய வேண்டும். காணி உரிமைகளுக்கான மொழியியல் மற்றும் கலாச்சார உரிமைகளையும், காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமையையும் அவர்களின் அடிப்படை உரிமைகளாக நாங்கள் பார்க்கிறோம். அந்த உரிமைகளைப் பாதுகாக்க நாம் பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம்.

இரண்டாவதாக, நாம் அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். ஒரு அரசாங்கமாக, அவர்கள் இழந்த பொருளாதார வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் ஒரு வலுவான பொருளாதாரத்தை உருவாக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதற்காக நாங்கள் ஏற்கெனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

வடக்கை மையமாகக் கொண்ட புதிய தொழில்துறை மண்டலங்களை நிறுவுதல், புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய சுற்றுலாத் துறையின் வளர்ச்சி மற்றும் சாகுபடிக்கு தண்ணீர் உள்ளிட்ட வசதிகளை வழங்குதல் ஆகியவை இன்று இதன் முக்கிய பகுதியாகத் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் கீழ், இந்த ஆண்டு சுமார் 12,000 விவசாயக் குடும்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 16,000 ஏக்கர் தென்னைகளை பயிரிட அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டம் அந்த மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு பெரும் ஆதரவாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இதேபோல், மற்றொரு படி கலாச்சார ரீதியாக நம்மிடையே ஏற்படுத்தப்பட வேண்டிய ஒருங்கிணைப்பு. அதற்காக, நாம் அனைவரும் ஒன்றாகக் கொண்டாடக்கூடிய ஒரு நாளை நாங்கள் பெயரிட்டுள்ளோம். விளையாட்டு மூலம் உறவுகளை உருவாக்க நாங்கள் கடுமையாக உழைத்து வருகிறோம். பிரிக்கப்பட்டுப் பிரிந்த மக்களை மீண்டும் ஒன்றிணைக்க நாங்கள் பெரும் முயற்சி செய்கிறோம்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பொருளாதார சிரமங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வுகளை வழங்க நாங்கள் பாடுபடுகிறோம். கடந்த ஒரு வருடமாக இதற்குத் தேவையான அடிப்படை அடித்தளத்தை நாங்கள் தயார் செய்துள்ளோம். இன்று, அரசியல் அதிகாரத்திலிருந்து மோசடி மற்றும் ஊழல் முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளன. பொது சேவை வலுவாக உள்ளது என்றார்.

## ஞாயிற்றுகளில் 'காலை' தடை

க.பொ.த. உயர்தரத்துக்கு மேலதிக வகுப்புகளை ஞாயிற்றுக்கி ழமைகளில் காலை நேரத்தில் தடை செய்வது நடைமுறைக்கு ஏற்றதல்ல என்றும், இது குறித்து மேலும் விவாதங்கள் நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார். குறிப்பாக அறநெறிப் பாடசாலை கல்வி இல்லாததால், குழந்தைகள் வழிதவறிச் செல்லும் போக்கு அதிகரித்துள்ளது என்றும், எனவே ஞாயி ற்றுக்கிழமை காலை நேரத்தில் அறநெறிப் பாடசாலைக்கு குழந்தைகளை அனுப்புவது முக்கியம் என்றும் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "காலநிலை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்"



காலநிலை பாதிப்புக்கள் மொத்தத் தேசிய உற்பத்தியினை 3.86% ஆக குறைப்பதற்கு காரணமாக அமையும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் காலநிலை அனர்த்த ஒன்றியத்தின் (Climate Vulnerable Forum) பொதுச் செயலாளருமான முகமது நஷீத் பங்குபற்றிய சுற்றுச்சூழல் தொடர்பான பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழுவில் உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

எனவே, காலநிலை மாற்ற சட்டத்தை விரைவாக செயல்படுத்தவும், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கைத் தடை செய்யவும், பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் காலநிலை நிதியை அணுகுவதற்கான வலுவான பிராந்திய ஒத்துழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு கோரினார்.

மேலும், இலங்கையின் வரையறுக்கப்பட்ட நிதி வாய்ப்புக்களை தெளிவுபடுத்தி, தீவக மக்களுக்காக தயாரிக்கப்பட்ட வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவிக்கு சர்வதேச ஆதரவைக் கோரினார். இந்த சாத்தியமான எதிர்கால ஆபத்தை நிவர்த்தி செய்ய இன்று முதல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் வலியுறுத்தினார்.

## "நான் வேண்டாம் என்றேன்": "அவர்கள் வேண்டும் என்றனர்"

வெளிநாட்டினர் மற்றும் உள்ளூர் இளைஞர்கள் அந்த DJ விருந்தில் இருந்துள்ளனர். அனைவரும் இசை மற்றும் நடனத்தை ரசித்துக்கொண்டிருந்ததாகவும் அந்தப் பெண் தனது புகாரில் தெரிவித்துள்ளார். இருப்பினும், ஒரு குழு ஆண்கள் தன்னை அணுகி, தகாத முறையில் தன்னைத் தொட்டதாகவும், தன்னை தொடவேண்டாம் கூறிய பின்னர் தான் எதிர்த்தபோது தன்னைத் தாக்கியதாகவும் அவர் கூறினார்.

அவர்கள் தாக்கியதில் அந்த பெண்ணின் இடது கண்ணுக்கு மேல் காயம் ஏற்பட்டுள்ளது. அவர், புத்தளத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

அதன்பின்னர் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அந்தப் பெண் எழுத்துப்பூர்வமாக ஒகஸ்ட் 31ஆம் திகதி கல்பிட்டி முறைப்பாடு செய்துள்ளார். அதனையடுத்து, அந்த, மூன்று சந்தேக நபர்களை அடையாளம் கண்ட பொலிஸார், கைது செய்துள்ளார்.

கற்பிட்டியைச் சேர்ந்த 23, 34 மற்றும் 39 வயதுடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு கற்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் செப்டம்பர் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## "கச்சத்தீவை விடமாட்டோம்"

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை ஜனாதிபதி உறுதியாக மீண்டும் வலியுறுத்தியதுடன், நாட்டின் கடற்றொழில் சமூகங்களுக்கு கச்சத்தீவின் மூலோபாய மற்றும் உணர்வுபூர்வமான முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

"கச்சத்தீவு நமது மீன்பிடி சமூகத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. தீவு தொடர்பில் பெரிய பொது விவாதம் எழுந்துள்ளது, இன்று அங்கு கடற்றொழிலாளர்களை சந்திக்க விரும்புகிறேன். இலங்கையின் பொறுப்பு அதன் நிலப்பரப்பைத் தாண்டி கடல் எல்லைகள் மற்றும் வான்வெளியை உள்ளடக்கியது.

நமது தீவுகள், நமது கடல் நமது வானம் அல்லது நமது நிலம், அவை நமது மக்களுக்குச் சொந்தமானவை. எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்

எனவே, எந்த வகையான வெளிப்புற அழுத்தத்துக்கு நாங்கள் அடிப்பணியமாட்டோம்" என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாட்டில் யுத்தமொன்று ஏற்படுவதற்கான சூழல் தற்போது இல்லை. எனவே, பாதுகாப்பு காரணங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"முன்னைய காலங்களில் கொழும்பில் ஒரு அரசாங்கம் உள்ளது, தமக்கு வேறொரு அரசாங்கம் வேண்டும் என வடக்கில் உள்ளவர்கள் கோரியிருந்தனர். தற்போது அனைவருக்குமான அரசாங்கமொன்று அமைய பெற்றுள்ளதால் அவ்வாறான கோரிக்கைகளுக்கு இனி இடமில்லை.

கடந்த காலங்களில் இருந்த இனவாதத்தை மையப்படுத்திய அரசியல் முறைமையை இந்த அரசாங்கம் இல்லாமல் செய்துள்ளது" எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர்கதையாக இருந்து வருகிறது. தமிழக மீனவர்களின் நலன் கருதி கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும் என பல்வேறு தமிழக அரசியல் கட்சிகள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற தவெக மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் விஜய்யும் கச்சததீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேசியிருந்தார். இந்நிலையிலேயே இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




## 1,000 பேர் உயிரிழப்பு

சூடான் விடுதலை இயக்கம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள மர்ரா மலையில் உள்ள டார்பர் என்ற பகுதியில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இந்த பகுதியில் திடீரென பயங்கர மண்சரிவும் ஏற்பட்டுள்ளது. இந்த மண்சரிவில் சிக்கி 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், ஒருவர் மட்டுமே உயிர் தப்பியுள்ளார்.

மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவால் கடும் சேதத்தை சந்தித்துள்ள இப்பகுதியில் சடலங்களை மீட்கவும், நிவாரண பணிகளை மேற்கொள்ளவும் ஐ.நா. சபை மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உதவ வேண்டும் என்று சூடான் விடுதலை இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



# கல்வியுதவி வழங்கும் நிகழ்வு



அமரர் திரு-திருமதி ரகுநாதன் ஆகியோர்களின் நினைவாக, அவர்தம் நிதிப் பங்களிப்பில், Ratnam Foundation அனுசரணையுடன், Visons Global Empowerment நிறுவனத்தின் ஊடாக 20 மாணவர்களுக்கான கல்வியுதவி வழங்கும் நிகழ்வு, வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா அவர்கள் முன்னிலையில்,வவுனியாவில் மாகாண தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப கேந்திர மத்திய நிலையத்தில் ஆவணி 30, 31ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் தலைமைத்துவப் பயிற்சியானது நடாத்தப்பட்டு, இரண்டாம் நாளில் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது இடம்பெற்றது. விஷன்ஸ் குளோபல் எம்பவர்மென்ற் நிறுவன தலைவர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையேற்று நடத்தப்பட்ட இந்நிகழ்வில், இரத்தினம் அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி. இரத்தினம் நித்தியானந்தன், விஷன்ஸ் அமெரிக்கா நிறுவன நலன் விரும்பி ஹரிச்சந்திரன் மற்றும் விசன்ஸ் இலங்கை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் அன்ரனி ஜீவரத்தினம் மயூரன் கலந்து கொண்டு, புலமைப்பரிசில் திட்டத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

மாணவர்களுக்கான சான்றிதழ்கள் ஆளுநர் மற்றும் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆகியோரின் கரங்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.











'Dream Destination' முதல் புகையிரத நிலைய

# நவீனமயமாக்கல் தல்பேயில் ஆரம்பம்

சுமார் 100 புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்தும் 'Dream Destination' தேசிய வேலைத் திட்டத்தின் முதற் கட்டம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தலைமையில் செவ்வாய்க்கிழமை (02) அன்று தல்பே புகையிரத நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் புகையிரத நிலையங்களை தற்போதைய உலகத்திற்கு ஏற்ற வகையில் புதிய அடையாளத்துடன் நவீனமயப்படுத்துவதற்காக அரசாங்கம், தனியார் துறை மற்றும் பொதுமக்களின் கூட்டு வேலைத் திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் மூலம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் 'Clean Sri Lanka' வேலைத் திட்டம் ஆகியவை தனியார் துறையின் ஆதரவுடன் 100 புகையிரத நிலையங்களை நவீனமயப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

புகையிரத சேவையை நவீனமயப்படுத்தல் என்பது தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு இராட்சதனை விழித்தெழச் செய்தல் ஆகும் என்று சுட்டிக்காட்டிய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி



அமைச்சர் பிரசன்ன குணசேன, பொதுப் போக்குவரத்தை தரமான சேவையாக மாற்றும் பொறுப்பை தற்போதைய அரசாங்கம் கைவிடாது என்றும் தெரிவித்தார்.

பொது போக்குவரத்தை முன்னேற்றுவதன் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாட்டை ஒரு செயற்பாட்டுத் தளமாக மாற்றுவதன் மூலம் இலங்கை விரைவான அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லப்படும் என்றும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, கோப் குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நிஷாந்த சமரவீர, இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத பொது முகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய, 'Clean Sri Lanka' செயலகத்தின் பணிப்பாளர் (சமூக) கபில செனரத், பணிப்பாளர் (ஒருங்கிணைப்பு) தசுன் விஜேசேகர, ஸ்டார் கார்மென்ட்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சுகுமாரன், ஹபராதுவ பிரதேச சபையின் தவிசாளர் ஹர்ஷ புஞ்சிஹேவா, NIO Engineering அழைப்பாளர் லக்மின சமரசேகர ஆகியோருடன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# மாத்தளையில் துப்பாக்கிச் சூடு

மாத்தளை, கொஹோலன்வல, ஹுனுபிட்டிய, மடவல உல்பத பகுதியில் உள்ள தென்னந்தோட்டத்தில் தேங்காய்களைத் திருட முயன்ற சந்தேக நபர், தோட்டத்தின் காவலாளியால் சுடப்பட்டு மாத்தளை மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை (02) அன்று இடம்பெற்றுள்ளது.

மாத்தளை, கொஹோலன்வல பகுதியில் உள்ள சுமார் 20 ஏக்கர் பரப்பளவு கொண்ட தென்னந்தோட்டத்திற்குள் அதே பகுதியில் வசிக்கும் இரண்டு நபர்கள் நுழைந்து இரண்டு சாக்குகளில் தேங்காய்களை சேகரித்துக்கொண்டிருந்த போது, தோட்டத்தின் காவலாளி அந்த நபர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சந்தேக நபர், சுடப்பட்ட பின்னர் சுமார் ஐந்நூறு மீட்டர் தூரம் ஓடி, கொஹோலன்வல பிரதான சாலைக்கு அருகில் விழுந்து, உள்ளூர் வாசிகளால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் சுடப்பட்ட நபர், பல சந்தர்ப்பங்களில் தென்னந்தோட்டத்திற்குள் நுழைந்து தேங்காய்களைத் திருடியதாக மஹாவெல பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மஹாவெல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் காவலாளி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார், மேலும் தென்னை தோப்பிற்குள் அனுமதியின்றி நுழைந்து தேங்காய்களைத் திருட முயன்ற மற்ற சந்தேக நபரைக் கைது செய்ய மஹாவெல பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

# ஒல்லாந்தர் கோட்டையில் நினைவேந்தல்...

எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பில் ஒல்லாந்தர் கோட்டையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தில் நினைவு தின நிகழ்வுகள் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டின் முரளிதரன் பங்குபற்றுதலுடன் பிரதி பிராந்திய இணைப்பாளர் யதுசியா முரளி தலைமையில் செவ்வாய்க்கிழமை (02) அன்று இடம்பெற்றது. சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தையொட்டி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் அலுவலகத்தில் தீபமேற்றி நினைவு கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவியின் தங்க நகை அபகரிப்பு

சுமனசிறி குணதிலக்க

மாணவி ஒருவர் திங்கட்கிழமை (01) அன்று தனது பிரத்தியேக வகுப்புக்களை முடித்துவிட்டு வீடு திரும்பும் போது, இனந்தெரியாத ஒருவர் அவரது கழுத்தில் இருந்து தங்க சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார். இந்த சம்பவம், மொனராகலை பகுதியில் இடம்பெற்றுள்ளது. 19 வயதுடைய குறித்த மாணவி தனது பிரத்தியேக வகுப்பை முடித்துவிட்டு நக்கல்ல தோட்ட பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு நபர் அவரது பின்னால் வந்து அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை பறித்துக்கொண்டு தப்பியோடியதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மற்றும் சந்தேக நபரைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## பூண்டுலோயா விபத்தில்

# மாணவர்கள் உட்பட ஐவர் காயம்

கௌசல்யா

தலவாக்கலையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து மற்றும் முச்சக்கர வண்டியொன்று செவ்வாய்க்கிழமை (02) அன்று பூண்டுலோயா கய்ப்புக்கொலை பகுதியில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது

குறித்த பேருந்து முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து ஏற்பட்டுள்ளதுடன் விபத்தின்போது, பேருந்தில் பயணித்த பாடசாலை மாணவர்கள் நால்வர் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த 5 பேரும் கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அறிவோர் ஒன்றுகூடல்





கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் புதன்கிழமை (03) மாலை 5.30 மணிக்கு, கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறும். அறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சியில்; எழுத்தாளர் கு.அழகிரிசாமி பற்றிய ஆவணப்படம் "கொலக்கால் திரிகை" என்னும் பொருண்மையில் அ.சாரங்கராஜன் மற்றும் ஓவியர் ப.மணிவண்ணன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இலக்கியக்களம்

விநோதன் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (05) மாலை 5.30 மணிக்கு ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி வளர்மதி சுமாதரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இலக்கியக்கள நிகழ்ச்சியில் "நானும் எனது எழுத்துக்களும்" என்னும் பொருண்மையில் மூத்த ஊடகர், எழுத்தாளர், இதழாசிரியர் கணபதி சர்வானந்தா உரையாற்றவுள்ளார்.

# இராணுவ வாகனத்துடன் மோதிய கார்

ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 13ம் கட்டை சந்தியில் இராணுவத்திற்கு சொந்தமான கெப் ரக வாகனமும் கார் ஒன்றும் மோதி செவ்வாய்க்கிழமை (02) விபத்துக்குள்ளானது.

தம்பலகாமம் 13ம் கட்டை சந்தி வளைவில் திருப்பிய இராணுவ கெப் ரக வாகனமும் திருகோணமலையில் இருந்து வந்த காரும் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளதுடன் இவ் விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


1333 BIKEATHON ride to save lives

RIDE TO SAVE LIVES CYCLING TOUR

12TH CONSECUTIVE YEAR

5ஆம் நாளின் பதிவுகள் | 130 கி.மீ | வெல்லவாய முதல் அம்பாறை வரை












CALL FOR CRISIS SUPPORT

CCC FOUNDATION courage compassion commitment

1333 WE LISTEN SUPPORT EMPOWER

இன்று
13 நாட்களில் 6ஆம் நாள்
செப்டெம்பர் 03
அம்பாறை → பாசிக்குடா (100 கி.மீ)

நாளை
13 நாட்களில் 7ஆம் நாள்
செப்டெம்பர் 04
ஓய்வு நாள்

எந்த தொலைபேசியிலிருந்தும், எந்த இடத்திலிருந்தும் 24 X 7 ஆதரவுக்கு 1333ஐ அழைக்கவும்

www.1333.lk

wijeyanewspapers DailyMirror தமிழ்Mirror the SUNDAY TIMES

# அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்த முன் கவனிக்கவும்

பல பெண்கள் உடையணிந்து, அழகாக உடையணிந்து, மற்றவர்களிடமிருந்து வித்தியாசமாக இருக்க விரும்புகிறார்கள். எனவே, அவர்கள் தங்கள் முகத்தைப் பிரகாசமாக்கவும், பளபளப்பான உடலைப் பெறவும் பல்வேறு அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவது வழக்கம்.

ஆனால், இதுபோன்ற அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு ஒருவர் இரண்டு முறை யோசிக்க வேண்டும். ஏனெனில் தரநிலை இல்லாத அழகுசாதனப் பொருட்களுக்கு இலங்கையில் எந்தத் தடையோ அல்லது ஒழுங்குமுறையோ இல்லை.

எனவே, நாம் பயன்படுத்தும் சில அழகுசாதனப் பொருட்கள் சில நேரங்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். இதைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பது நல்லது. புறக்கோட்டையில், நுகர்வோர் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில், அங்கீகரிக்கப்படாத வெண்மையாக்கும் கிரீம்கள் மற்றும் பதிவு செய்யப்படாத அழகுசாதனப் பொருட்கள் சோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டன, இது நுகர்வோருக்கு கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்தக்கூடியது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தரமற்ற அழகுசாதனப் பொருட்களுக்குத் தணிக்கை செயல்முறை இல்லாததால், பலர் அத்தகைய தரங்களைப் பூர்த்தி செய்யாத பொருட்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். இறக்குமதி உரிமம் இல்லாமல் அவற்றை இறக்குமதி செய்வது மற்றொரு ஆபத்தான சூழ்நிலை. அவர்கள் அவற்றை ஏதோ ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்து இங்குள்ள அழகு நிலையங்களில் விற்கிறார்கள். இதை அவர்கள் செய்தித்தாள்களில் கூட விளம்பரப்படுத்துவதில்லை. ஏனென்றால் அதற்குப் பொறுப்பேற்க யாரும் இல்லை.

சமூகத்தின் எந்த நிலையாக இருந்தாலும், தனிப்பட்ட அழகு சிகிச்சைகளுக்காக அழகு நிலையங்களுக்குச் செல்வது நம் சமூகத்தில் ஒரு பொதுவான நடைமுறையாகும். அழகு நிலையங்களில் உள்ள அழகு நிபுணர்களால் இவை விநியோகிக்கப்படுகின்றன. பலர் தங்கள் நிறுவனங்களுக்கு மக்களை ஈர்க்க விரும்புகிறார்கள். எனவே, அவர்கள் அத்தகைய தயாரிப்புகளை ஆதரித்து நுகர்வோருக்கு வழங்குகிறார்கள். இவற்றிலிருந்து கிடைக்கும் லாபமும் மிக அதிகம்.

இங்குள்ள மற்றொரு ஆபத்தான விஷயம் என்னவென்றால், இந்த தயாரிப்புகளில் அதிக அளவு கன உலோகங்கள் உள்ளன. அவற்றை ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதன் மூலம் உள்ள பாதரசத்தின் அளவைக் கண்டறிய முடியும். இலங்கை தரநிலைகள் நிறுவனம் பரிந்துரைத்தபடி, ஒரு பொருளில் இருக்கக்கூடிய பாதரசத்தின் அளவு ஒரு கிலோ கிராமுக்கு ஒரு மில்லிகிராம் மட்டுமே. தயாரிப்புகளில் உள்ள பாதரசத்தின் அளவைக் குறைக்க இந்த நடைமுறை எடுக்கப்படுகிறது. ஏனெனில் பாதரசம் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த கன உலோகம். ஆனால் இப்போது அழகு நிலையங்கள் இந்த பொருட்களை ஒரு கிலோ கிராமுக்கு 7.5 கிராம் முதல் 9 கிராம் வரை அதிக நச்சுத்தன்மை கொண்ட அளவில் விற்பனை செய்கின்றன.

தரச் சான்றிதழ் உள்ள தயாரிப்புகளும், தரச் சான்றிதழ் இல்லாத தயாரிப்புகளும் சந்தையில் உள்ளன. இலங்கை தரச் சான்றிதழ் நிறுவனம் தரச் சான்றிதழை மேற்கொள்கிறது, ஆனால் அதற்கு அப்பாற்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை. எனவே, இதுபோன்ற தரமற்ற தயாரிப்புகளுக்குத் தரச் சான்றிதழ் இல்லை. ஆனால், சரியான விசாரணை இல்லாமல் இதுபோன்ற தயாரிப்புகளைப் பயன்படுத்துவது நுகர்வோருக்கு மிகவும் ஆபத்தானது. இந்த தயாரிப்புகளால் ஏற்படக்கூடிய பல கோளாறுகளும் உள்ளன.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# பூச்சாண்டியாகப் போகும் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு

எம்.எஸ்.எம்.ஐயூப்

முன்னாள்ர ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டமையிட்டு, எதிர்க் கட்சிகளிடையே பெரும் அதிர்வலையை உருவாக்கி உள்ளமை காணக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கத்துக்கு எதிராகக் கூட்டணி அமைக்க அவை முன்வந்துள்ளமை அதனையே காட்டுகிறது.

ரணில் கைது செய்யப்படுவார் என்று அக்கட்சிகள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை போலும். அதற்கான பிரதான காரணம் அரசியலில் குறிப்பிட்டதொரு மட்டத்துக்கு மேற்பட்டோர் எதைச் செய்தாலும் அவர்கள் கைது செய்யப்படபோவதில்லை என்றதோர் எழுதப்படாத நியதி கடந்த காலங்களில் இருந்து வந்தமையேயாகும்.

சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த, கோட்டாபய மற்றும் ரணில் ஆகியோர் இவ்வாறு சட்டம் எட்டாத உயர் மட்டத்தில் இருந்து வந்துள்ளனர். கடந்த காலங்களில் எத்தனையோ ஆட்சி மாற்றங்கள் இடம் பெற்ற போதிலும் இவர்களுக்கு எதிராக எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இருந்த போதிலும் அவர்கள் கைது செய்யப்படவில்லை.

கோட்டாபயவை கைது செய்யத் தாம் இடமளிக்கப்போவதில்லை என்று நல்லாட்சி அரசாங்கத்தின் நீதி அமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ஷ பகிரங்கமாகவே கூறியதை நாம் மறக்க முடியாது. அதே காரணத்தால் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரணிலை ஒரு நாள் சிறையில் அடைத்தால் தாம் தமது காதை அறுத்துக்கொள்வதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர அண்மையில் சவால் விட்டார். முடியுமானால் ரணிலை ஒரு நாள் சிறையில் வைத்துக் காட்டுங்கள் என்று சர்வஜன பலய கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவும் அண்மையில் சவால்விட்டு இருந்தார்.

ஆனால், கடந்த ஒகஸ்ட் 22ஆம் திகதி ரணில் கைது செய்யப்பட்டதையடுத்து, அந்த எழுதப்படாத நியதி தகர்க்கப்பட்டது. இந்த நியதி தகர்க்கப்பட வேண்டும் என்றும் அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடூர சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றுமே தமிழ் மக்களும் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இப்போது அந்த நியதி தகர்க்கப்பட்டு விட்டது. “அடுத்து நாம்” என்றதோர் அச்சத்தை அது சில எதிர்க்கட்சித் தலைவர்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறது. ஏனெனில், அவர்கள் பல பாரதூரமான குற்றச் செயல்களுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

எனவே, பட்டலந்த சித்திரவதை முகாம் நடத்தியதற்காகவும் மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்காகவும் ரணிலை சிறையில் அடைக்க வேண்டும் என்று பல வருடங்களாகக் கூறி வந்த தற்போது எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் ரணில் கைது செய்யப்பட்டவுடன், அது தவறு என்றும் அது ஜனநாயகத்தின் மீது விழுந்த பலத்த அடி என்றும் இப்போது கூச்சலிடுகின்றனர். இலங்கையில் சட்டம் ஒரு சாராரை நெருங்குவதில்லை என்றும் எனவே சர்வதேச தலையீடு அவசியம் என்று கூறும் தமிழ் தலைவர்களில் சிலரும் அவர்களோடு சேர்ந்துள்ளனர்.

“அடுத்து நாம்” என்ற அச்சமே எதிர்க்கட்சிகளின் பொது கூட்டணியை அமைக்க அவர்களை தூண்டியுள்ளதேயல்லாமல் மக்கள் எதிர்நோக்கும் எந்தவொரு பிரச்சினையும்; அதற்காக அவர்களைத் தூண்டவில்லை. இந்தக் கூட்டணி எதிர்வரும் தேர்தல்களில் அரசாங்கத்தை எதிர்த்துப் போட்டியிடும் கூட்டணியாக ஆரம்பத்தில் அவர்களில் பலர் வர்ணித்தனர். ஆயினும், இப்போது அரசாங்கத்தின் சர்வாதிகார போக்கை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டணியாக அவர்கள் விவரிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே போன்ற எதிர்க்கட்சிகளின் சில தலைவர்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய தண்டனைகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா போன்றோர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டமை முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ போன்றோர் கைது செய்யப்பட்டமை ஆகியனவும் அவர்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நடவடிக்கைகளைச் சர்வாதிகாரம் என்றழைக்க காரணமாக உள்ளதாகத் தெரிகிறது.

உண்மையில் இவை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் காலத்தில் திட்டமிடப்பட்ட குற்றச்சாட்டுக்களோ தண்டனைகளோ கைதுகளோ அல்ல. இவை முந்தைய அரசாங்கங்களின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டவையாகும். ஆயினும், அக்காலத்தில் அரசியல் செல்வாக்கின் காரணமாக அவற்றை முன்னெடுத்துச் செல்ல பொலிஸாரோ சட்ட மா அதிபர் திணைக்களமோ இடமளிக்கப்படவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வராவிட்டால் மஹிந்தானந்தவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று நம்ப முடியாது. நீதிமன்றங்கள் எவ்வளவு நடுநிலையாகச் செயற்பட்டாலும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூலம் அரசாங்கங்கள் வழக்கு விசாரணைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கலாம். உரிய ஆவணங்களை வருடக் கணக்கில் தாமதப்படுத்தலாம். ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கின் போது செய்ததைப் போல் ஒரு வழக்கின் இறுதிக் கட்டத்தில் சட்ட மா அதிபர் வழக்கை வாபஸ் பெறலாம்.

ரத்தன தேரர் ஒரு நபரைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அது தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அல்ல. ஆனால், அவர் கடந்த வாரம் வரை சுதந்திரமாக நடமாடினார். இது போன்றவர்கள் தொடர்பான கோவைகள் இதுவரை காலமும் கிடப்பில் போடப்பட்டு இருந்தன. இப்போது இக்கோவைகளைக் கையாண்ட அதிகாரிகள் மீதான அரசியல் நெருக்குவாரம் அகற்றப்பட்டுள்ளன. எனவே, அந்த அதிகாரிகள் அந்தக் கோவைகளை முன் நகர்த்த ஆரம்பித்துள்ளனர்.

இதனை அரசியல் பழிவாங்கல் என்று கூற முடியாது. தாம் கையாளும் வழக்குகளை அரசியல் பழிவாங்கல் என்று கூறுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க அண்மையில் எச்சரிக்கை செய்தார். எனவே, எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேர்வதற்காக அடிப்படையாகக் கொண்டுள்ள வாதமே பிழையானதாகும். குற்றமிழைத்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது பழிவாங்கல் என கூறுவதனால் அந்நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டால் ஊழலைத் தடுக்கலாமா?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாம் பதவிக்கு வந்த நாட்களில் உடனடியாக ஊழல் பேர்வழிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. எங்கே திருடர்களைப் பிடித்து விட்டீர்களா? என்று அப்போது எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை ஏளனம் செய்தனர். திருடர்களைப் பிடிக்கும் போது முனங்க வேண்டாம் என்று அப்போது ஜனாதிபதி அனுரகுமாரவுக்கு பதிலளித்தார். இப்போது ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் அரசியல்வாதிகள் கைது செய்யப்படும் போது எதிர்க்கட்சிகள் அதனை அரசியல் பழிவாங்கல் என்கின்றன.

பதவிக்கு வர பல ஆண்டுகளுக்கு முன்னர் தாம் பதவிக்கு வந்தால் இந்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதாகத் தேசிய மக்கள் சக்தி தலைவர்கள் கூறி வந்தனர். இப்போது அவர்கள் பதவிக்கு வந்து அவற்றை விசாரணை செய்வதற்கான வாய்ப்பையும் வசதிகளையும் உரிய அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதிகாரிகள் அதன் படி நடவடிக்கை எடுக்கிறார்கள். அது எவ்வாறு பழிவாங்கலாகும்?

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளுக்கு அவர்கள் ஓய்வு பெற்றதன் பின்னர் வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகளை ரத்து செய்யும் தேசிய மக்கள் சக்தியின் நடவடிக்கைகளும் இப்போது எதிர்க்கட்சிகள் அரசியல் பழிவாங்கல் என்று கூறுகின்றன. ஆனால் அவையும் தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வந்ததன் பின்னர் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அல்ல. நீண்டகாலமாக இதுவே தேசிய மக்கள் சக்தியின் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கையாக இருந்து வந்துள்ளது.

அதன் காரணமாக ஏனைய கட்சிகளைச் சேர்ந்த சிலரும் கடந்த காலத்தில் அதற்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் உள்ளிட்ட பதவிக் காலத்திற்குப் பின்னரான வசதிகளை இரத்துச் செய்யத் தாம் தனிநபர் பிரேரணை ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா வித்தானகே கடந்த நவம்பர் மாதம் கூறினார்.

அவர் இவ்வாறானதொரு பிரேரணையைச் சமர்ப்பிக்காவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கடந்த பிப்ரவரி மாதம் அவ்வாறானதொரு சட்ட வரைவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

எவ்வாறாயினும், ரணிலை கைது செய்த சம்பவத்தைப் பாவித்து எதிர்க்கட்சிகள் அரசியல் ரீதியாக ஒன்று சேர்வது அல்லது கூட்டணி அமைப்பது என்பது யதார்த்தபூர்வமானதல்ல. ஏனெனில் ரணிலைப் போலவே தாமும் சட்டத்தில் சிக்கலாம் என்ற அபாயத்தின் காரணமாக அவர்கள் இவ்வாறு கூறினாலும், அவர்களின் அரசியல் இலக்குகள் ஒன்றல்ல. தத்தமது கட்சி அடுத்த தேர்தலில் பதவிக்கு வர வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாகும்.

எனவே, இந்த கூட்டுச் சேரும் முயற்சிக்குள்ளும் அந்த நோக்கம் செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. குறிப்பாக இவ்வாறானதொரு கூட்டு அமைவதாக இருந்தால் அது தமது தலைமையில் அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஒவ்வொரு எதிர்க்கட்சியினதும் தலைவர் இருக்கிறார்.

அத்துடன், கூட்டுச் சேரும் நோக்கத்துக்காக ஏனைய கட்சிகளின் தலைமையில் கூட்டம் கூடும் போது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அவற்றில் கலந்து கொள்ளவில்லை. சஜித்தின் தலைமையிலான கூட்டங்களில் ரணில் கலந்து கொள்வாரா? ஏற்கனவே ஐ.தே.க விலிருந்து பிரிந்து சென்றவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை வாபஸ் பெறுவதாக ஐ.தே.க. இவ்வாரம் அறிவித்துள்ளது. இது ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்தும் செயலாகும்.



## வாழ்வியல் தரிசனம்

கண்டிப்பு கூட, கனிவுதான். சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்க! ஒருவரை முழுமனிதனாக மாற்றுவது, அன்பானவர்களின் கண்டிப்பு அல்லவா?

மெல்ல மெல்ல பட்டை தீட்டப் படுபவர்களில் நாங்களும் ஒருவர். பிறந்தவுடன் முழுமனிதனாகிவிட முடியாது. ஒவ்வொரு பராயத்திலும், புதுப்புது அனுபவக் குவியல்கள்; பெற்றோர், நண்பர்கள், ஆசான்கள், உறவுகள் எனப் பலரும் சொல்லும் அறிவுரைகள், பெரும் செல்வங்களைவிட மேலானது.

சிலவிடயங்களை இளைய தலைமுறையினரிடம் இருந்தும் கற்க வேண்டும். அறிவு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு, எங்களிடம் வருகின்றது. இவற்றை நெஞ்சில் இருத்துக! மனம் முழுக்க மழைதான் பெய்ய வேண்டும். சுடு நெருப்பு அல்ல! வார்த்தைகள் குளுமையாகவும் தென்றல் காற்றின் சுகானுபவத்தையும் ஊட்ட வேண்டும். கனிவுடன் பழகுதல், இனிமையை வழங்குதல் போலாகும். பாகுபாட்டை நோக்கினால், சமூகமும் அவர்களை நோக்காது. அன்பைக் காட்டாதவன், தனிமையில் புரள்கின்றான். உலகைத் தூய்மைப்படுத்த, எந்தத் தனிமனிதனையும் புறக்கணித்தலாகாது. அன்பே இன்பம்!

பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைத்து தாருங்கள்

பதுளை மாவட்டத்தில் உள்ள பசறை கரடிஎல்ல நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் அப்பகுதி மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வரும் பயணிகள் பசறையிலிருந்து, 10 கி.மீ தூரம் கடந்து மெதவெலகமவிற்கு சென்று அங்கிருந்து கடும் சேதமடைந்த வீதி வழியாகக் கரடி எல்ல நோக்கிச் செல்கின்றனர். இந்த நீர்வீழ்ச்சிக்குச் செல்லும் வீதி அபிவிருத்தி செய்யப்பட்டால், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்றும், கிராமவாசிகள் அதன் நன்மைகளைப் பெறலாம் என்றும் அப்பகுதியைச் சேர்ந்த தேரர் ஒருவர் தெரிவித்தார். இந்த வீதி பல காலமாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுவதால் பிரதேச வாசிகள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் கிராம மக்கள் தங்கள் நெல், மிளகு மற்றும் தேயிலைகளை மலைக்குக் கொண்டு செல்லும் போது கடும் சிரமத்திற்குள்ளாக வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பாலித்த ஆரியவங்ச





நாகலிங்கம் பிரியதர்ஷினி,
முதுகல்விமாணி கற்கை.

# கல்வியும் உலகமயமாதலும்

உலகமயமாதலும் கல்வியும் என்பது சமகால உலகத்தில் முக்கியமான விவாதப் பொருளாக உள்ளது. இது கல்வி முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், உலகளாவிய நடப்புகளின் தாக்கத்தையும் சுட்டிக் காட்டுகிறது. உலகின் முதன் முதலில் 1980 பகுதியில் தான் உலகமயமாதல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இன்றைய நாடுகளிடையே ஏற்பட்டு வரும் சர்வதேச உறவின் காரணமாக ஏற்பட்டு வரும் உலகமயமாதல் பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போமாயின், உலகமயமாதல் என்பது தொடர்பாடல், தொழினுட்பம் ஆகியவை முழு உலகிற்கும் பரவலடைதல் எனவும் இதில் பொருளாதாரம் போலவே கலாசாரமும் தொடர்புபடுகிறது. எனப் பொருள் கூறப்படுகிறது. “உலகின் பொருளாதார கலாசார வாழ்க்கைக்கு இடையிலான பல் நூற்றாண்டுகளின் பிணைப்பே” என கூறப்படுகிறது.

மேலும் உலகமயமாதல் என்பது பின்வருமாறு முன் வைக்கப்படுகிறது. நாடுகளுக்கிடையிலான எல்லைகளைக் கடந்த உறவே உலகமயமாதல் என எளிமையாக கூறப்படுகிறது.

Hirst Peter’s (1996) என்பவர்கள் உலகமயமாதல் என்பது சர்வதேச பரிமாற்றங்களினதும் பரஸ்பர தங்கி இருப்புகளினதும் வளர்ச்சி என்றும் இது முதலீட்டு வாய்ப்புக்களையும் வணிக பரவலாக்கங்களையும் ஏற்படுத்தும் வாய்ப்பை சர்வதேசத்தில் உருவாக்குகிறது. மேலும், Schoite (2000) என்பவர் திறந்த எல்லைகளற்ற உலகம் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் விதிக்கும் கட்டுப்பாடுகளையும் கடந்து நாடுகளுக்கு இடையே உருவாக்கும் ஒரு செயன்முறையே உலகமயமாதல் எனக் குறிப்பிடப்படுகிறது.

இனி உலகமயமாதலில் கல்வியில் ஏற்பட்டுள்ள கல்வி உலகமயமாதல் என்பதை நோக்குவோமாயின், உலகமயமாக்கலில் இயங்கு தன்மை அதன் பொருளாதார கொள்கையினூடாக கலாசாரம், தொடர்பாடல் போன்று கல்வியிலும் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. கல்வி உலகமயமாதல் பற்றி சர்வதேச நிதியம் (IMF) பின்வருமாறு கூறுகின்றது. உலகமயமாதல் சகல நாடுகளிலும் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ‘பங்கஸ் என்பவர் கல்வி உலக மாயமாதல் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். “நடைமுறை உலகு கல்வியில் ஒரு பரந்த தொலை நோக்கை வேண்டி நிற்கிறது.

இது தெளிவான தெரி சிந்தனை மிக்க தேசிய சர்வதேச அடையாளங்களைக் கொண்ட கூர் பார்வையே பிள்ளைகளுக்கு தர வேண்டியுள்ளது” என்கிறார். From (1976) என்பவர் நவீன மனிதன் அவனிலிருந்து அவன் உறவுகளிலிருந்தும் இயற்கையிலிருந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளான். அவனுடைய வாழ்வு வணிகமயமானதாகும். உச்ச இலாபத்தை அடைய வேண்டிய முதலீடுகளுக்கு உரிய வாழ்க்கை அனுபவங்களுக்குரியதாகும். நடைமுறை சந்தை நிலைமைகளுக்கு உரியதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கல்வியானது வாழ்வது என்பதற்கானதாக அமைவதானாலும் இருத்தல் என்பதற்குரியதாக மாற்றப்பட்டுள்ளது என்று கூறுகிறார். மேலும் கல்வியில் உலகமயமாதல் பற்றி புசைழர (200) என்பவர் “வகுப்பறை ஒன்றுக்குள் ஆசிரியரின் வகிபாகம் பாட ஏற்பாடுகளுக்கு ஊடாகவும் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊடாகவும் சந்தை அடிப்படை நுகர்விற்குரிய கற்போரை முகாமைத்துவம் செய்யும் முகாமையாளர் எனும் நிலைக்கு உட்படுத்தியுள்ளது.

உலகமயமாதல் ஆனது சமூக, பொருளாதார, மருத்துவ, போக்குவரத்து, தகவல் தொழினுட்பம் என்று எல்லாத் துறைகளிலும் தனது செல்வாக்கினை பெற்றுள்ளதோடு, அது கல்வியில் இன்று பாரிய செல்வாக்கினையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கல்வியில் அது உயர் கல்வியில் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கினை ஆராய்வோரின் உயர் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் கற்றறிவாளர் வகுப்பினரின் தோற்றம் உலகமயமாதலின் விளைவே ஆகும். நிலவுடைமை முதலாளித்துவ சமுதாய காலத்திலே சொத்துள்ளவர் பெற்றிருந்த செல்வாக்கு இன்று கற்றறிவாளர் எனும் சமூகத்தினரைப் பெற்றுள்ளது. இது உயர்கல்வியினூடாக ஏற்பட்ட உலகமயமாதல் ஆகும்.

கல்விக்காக உலகளாவிய ரீதியிலும் சரி இன்று இலங்கையிலும் சரி அரசானது பொதுக்கல்வியைத் தனது கட்டுப்பாட்டிலும் அதற்காக பாரிய நிதியை ஒதுக்கியும் வந்தது. ஆனால், அண்மைக் காலமாக அது தனியார்த் துறையினரிடம் செல்வாக்கு செலுத்தும் போக்கு காணப்படுவதை அவதானிக்கலாம். உதாரணமாக, கடந்த 2, 3 வருடங்களுக்கு முன் ஆலோசிக்கப்பட்டு வந்த பாடசாலை அடிப்படை முகாமைத்துவம் முறையே அரச இலங்கையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இன்னும் அது பரிசீலனையில் உள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது. இது உயர் கல்வியில் கிராமப்புற வறிய மாணவர்களுக்குப் பாதகமான ஒரு விளைவை ஏற்படுத்தும். ஏனெனில், இப்பாடசாலை நிர்வாக முறை மறைமுக மேற்கத்திய முறையினை தனியார் கல்விக்கான ஒரு வழி என்றே கருதப்படுகிறது.

உயர்கல்வி இன்று உலகளாவிய ரீதியிலும் (இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் இலங்கையிலும் ஆங்கில கல்விக்கு மக்கள் மத்தியில் மோகம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இது உயர்கல்விக்கு பல்வேறு வழிகள் மூலம் வசதி வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதனால் ஆங்கிலம் என்பது ஒரு வெளிநாட்டு மொழி என்ற நிலை மாறி ஒரு பயிற்சி மொழியாக மாறி வருவதனால் இன்று இலங்கையில் அனேக சர்வதேச பாடசாலைகள் தோற்றம் பெற்று வருவதையும் வளர்ச்சியடைவதையும் நாம் காணலாம். இந்த வளர்ச்சிக்கான காரணம் உலகமயமாதலில் கல்வியின் தேவையே ஆகும். ஆங்கில கல்வியில் தொடர்பாடல் வசதிகளினூடாக உயர்கல்வியில் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது. உதாரணம்: Smart Phone, YouTube உயர்கல்விக்குரிய புத்தகங்கள், இணையம், சஞ்சிகைகள் அனேகமானவை ஆங்கில மொழியுள்ளதே ஆகும். சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உயர்கல்விக்கு வாய்ப்பு அளிக்கின்றது. இது கல்வியில் உலகமயமாதலின் தாக்கம் ஆகும்.

கல்வியில் உலக மயமாதலானது வெளிநாட்டு உதவிகள் உயர்கல்வி மாணவர்களுக்கு பல பயன்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது. அவை பின்வருமாறு,

- பட்டதாரிகளை உருவாக்குவதற்குரிய உயர்கல்விக்கு உதவிகளை வழங்குகிறது.
- தொடர்கல்வி, தொழில்நுட்பக்கல்வி முதலியவற்றை விரிவாக்குவதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறுகிறது.
- புலமைப்பரிசில்கள், உயர்கல்விக்குரிய ஆராய்ச்சிக்குரிய உதவி திட்டங்கள், ஆய்வரங்கு போன்றவற்றிற்கு பயிற்சியளித்தல்.
- உயர்கல்வியோடு இணைந்த வசதிகளை விரிவாக்கவும் கல்விக்கு அனுசரணையான ஆளனியினரை பயிற்றுவிக்கவும் விரிவாக்கம் செய்வதற்கு வெளிநாட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.
- குறித்த சில பாடத்துறையில் உள்ளவர்களின் நிபுணத்துவ சேவை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

தொழிற்சந்தையிலிருந்து வரும் கேள்விகள்

கல்வி உலகமயமாதலானது தொழிற்சந்தையிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. முன்னர் உலகளாவிய நாடுகளிலும் சரி, இலங்கையிலும் சரி தொழிற்சந்தைக்கான கேள்வி மரபு ரீதியாகக் காணப்பட்டது. ஆனால், அதன் பரிணாம ரீதியில் வளர்ச்சிப் போக்கு இன்றைய தொழில் போட்டிக்கு வேறு பரிணாமத்தைக் காட்டி நிற்கிறது. உதாரணம்:- முன்னர் கல்வியில் சாதாரணதர, உயர்தர, பட்டதாரி என்ற நிலையில் மட்டுமே இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், இன்று அக்கல்வி தகைமைகளுக்கு மேலதிகமாக ஆங்கிலம், கணினி, தகவல் தொழினுட்ப அறிவுள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

## இளைஞர்களுக்கிடையே விழுமியங்களும் மனப்பாங்குகளும்

விழுமியம் பற்றி ஏ.எஸ்.பாலசூரிய (1997) பின்வருமாறு கூறுகிறார். ‘விழுமியம்’ என்பது தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றை யோசிக்கின்ற வளப்படுத்துகின்ற அர்த்தமுள்ளதாக்குகின்ற மனித சமூக பண்பாடு என்கிறார். கீழைத்தேய நாடுகளில் விழுமியக் கல்விக் கல்வி மரபு ரீதியாக பேணப்பட்டு வந்தது. அது கல்வியின் நோக்கங்களாக நடத்தை விருத்தி, ஒழுக்காற்று நற்குண விருத்தி என்பவற்றைக் கொண்டன. ‘விந்தியா ததானி விநயங்’ என்பது கற்றலினால் ஒழுக்கம் உண்டாகும் என்பது பொருளாகும். இவ்வாறு விழுமிய கற்றலில் மனப்பாங்கு, விழுமியங்கள், நல்லொழுக்கம், ஒழுக்காறு, வாழ்க்கை. தத்துவம் என்ற செயலொழுங்கு காணப்படும். இச்செயலொழுங்கினூடாக செல்லும் போது விழுமியக் கற்றலை மேற்கொள்ளலாம்.

ஆசிய நாடுகளில் இவ்விழுமியங்கள் சமயம், பண்பாடு என்பவற்றை கொண்டெழுந்தவை ஆகும். புறற உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல், கொல்லாமை, பிறருக்கு உதவுதல், பெரியோரை கனம் பண்ணுதல் உயர்ந்த விழுமியங்களாகக் காணப்பட்டது. இந்த தத்துவத்திலே பகவத்கீதை, உபநிடதங்கள் போன்றன உயர்ந்த ஒழுக்க விழுமியங்களைக் கூறின. அதேபோல் தமிழ் மக்களின் விழுமிய நூலாகத் திருக்குறள் விளங்கியது. ஆனால், இன்று உலகமயமாதலில் விளைவு பொருள் நலனை விடத் தனி மனித நலனே முதன்மை பெறும் போக்கு காணப்படுகிறது. இதனால் வசதியுடைய செல்வந்தர்கள் ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு இடைவெளி அதிகரித்துள்ளதால் சரியான புரிந்துணர்வு இல்லை. எனவே விழுமியங்கள் கல்வி செயற்பாட்டில் இடம்பெறும் பொழுதே அது மனித மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும். இளைஞர்கள் மாணவர்களின் விழுமிய வளர்ச்சியில் எவ்வாறு பங்கு கொள்வது என்பது பற்றி கல்வி முறைகள் சரியான முடிவுகளைச் செய்யவில்லை. இதனால் அவர்கள் விழுமியங்களிலிருந்து விலகி கல்வி முறைகள் வெற்றியளிக்க முடியாத நிலை உள்ளது.

உலகமயமாதலினால் கல்வி தொழிலுக்குரிய ஒரு ஏற்பாடாகி உள்ளதால் கல்வியின் நோக்கான நற்பிரசையை உருவாக்குவதால் முக்கிய நோக்கங்கள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளன. எனவே, கல்வி செயற்பாட்டில் விழுமிய மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த மனித குல நேய பண்புகளை உடைய இலட்சியத்தை உருவாக்கும் விதத்தில் கல்வி செயற்பாடுகள் இடம்பெறுதல் காலத்தின் தேவையாக உள்ளது.

புதிய நூற்றாண்டில் தோன்றிய நவீன விழுமியங்கள் மனித உரிமை தனியார் சுதந்திரம், கௌரவம் தொடர்பான விழுமியங்களே ஆகும். இதனை மேம்படுத்துவதில் கல்வியின் வகிபங்கு முக்கிய இடத்தை பெறுகிறது. உலகமயமாதலின் விளைவாக இளைஞர்கள் தகவல் தொடர்பு காரணமாக முன்னேற்றகரமான சில அம்சங்கள் உண்டு. கணினி, இணையம் மூலம் பல்வேறு பயனுள்ளவற்றை வாழ்க்கை முறைகளிலும் தொடர்பாடல், போக்குவரத்து, மருத்துவம், கல்வி, சுகாதாரம் என பல நன்மைகளும் உள்ளன.

எனவே, மேற்கத்திய மாதிரி வாழ்க்கை முறையிலிருந்து கீழைத்தேய நாடுகள் அதிலும் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகள் தமக்கே உரிய பண்பாட்டு விழுமியங்கள்,

கலாசார மரபுகளைப் பேணி பாதுகாப்பதற்கு ஏற்ற கல்வி செயற்பாடுகளைத் தேசிய கல்விக் கொள்கையில் ஏற்படுத்தி அதில் விழுமியங்கள் மனப்பாங்குகளை விருத்தி செய்வதற்குக் கல்வி முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இன்று மேற்கத்திய நாடுகள் கூட நமது நாட்டுக் கல்வியில் விழுமியக் கல்வியைச் சேர்த்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. எனவே இது ஒரு முன்னேற்றகரமான நிலை என்றே கருத வேண்டும்.

உலகமயமாதல் கல்வியை நவீனமாகவும், உலகளாவிய போட்டிக்கு ஏற்ப மாற்றுகின்றது. ஆனால், அதே நேரத்தில் உள்நாட்டு மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களைப் பாதுகாத்து வளர்த்தே உலகமயமாதலை நன்மையாக மாற்ற முடியும். உலகமயமாதலும் கல்வியும் சமநிலை கொண்டு செயற்பட்டால் தான் உண்மையான முன்னேற்றம் சாத்தியமாகும்.



# ஜனாதிபதியின் யாழ்.விஜயம்...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, யாழ்ப்பாணத்துக்கு திங்கட்கிழமை (01) அன்று விஜயத்தை மேற்கொண்டபோது, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.






## யாழில் சர்வதேச கிரிக்கட் மைதானம்...

யாழ்ப்பாணம், மண்டைதீவில் நிர்மாணிக்கப்படும் யாழ். சர்வதேச கிரிக்கட் மைதானத்தின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, திங்கட்கிழமை (01) அன்று ஆரம்பித்து வைத்தார்.





## மயிலிட்டி...

யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுக மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் திங்கட்கிழமை (01) அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.




## திறந்து வைப்பு...

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவால், திங்கட்கிழமை (01) திறந்து வைக்கப்பட்டது.













## e-library...

யாழ்ப்பாண நூலகத்தை மின் நூலகமாக (e-library) அபிவிருத்தி செய்யும் திட்டம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் திங்கட்கிழமை (01) அன்று ஆரம்பிக்கப்பட்டது.









## கச்சத்தீவில் ஜனாதிபதி...

யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களைத் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் மற்றும் திறப்பு விழாக்கள் என்பவற்றில் பங்கேற்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, யாழ்ப்பாணத்தில் உள்ள கச்சத்தீவிற்கு கண்காணிப்பு விஜயமொன்றை திங்கட்கிழமை (01) அன்று மேற்கொண்டார்.

இந்த விஜயத்தில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால, வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் புத்திக லியனகமகே ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

சண்டிகர்

வெள்ளத்தில் தத்தளிக்கும் இந்திய வடமாநிலங்கள்

# பஞ்சாபில் 29 பேர் பலி; இலட்சக்கணக்கானோர் பாதிப்பு

பஞ்சாப் மாநிலத்தில் பெய்து கனமழையால், 29 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 2.5 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளனர.



ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் ஜம்மு-காஷ்மீரில் உள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, சட்லஜ், பியாஸ் உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக பஞ்சாப் பெரும் வெள்ளப்பெருக்கை சந்தித்து வருகிறது.

மேலும் வெள்ளத்தால், குருதாஸ்பூர், பதான்கோட், பாசில்கா, கபுர்தலா, பெரோஸ்பூர், ஹோஷியார்பூர் உள்ளிட்ட கிராமங்கள் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

அனைத்து கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுக்கும் இன்று புதன்கிழமை 3ஆம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ஒகஸ்ட் 1ஆம் திகதி தொடங்கி ஒரு மாதத்தில் மாநிலத்தில் உள்ள 23 மாவட்டங்களில் 12 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இது பல தசாப்தங்களில் பஞ்சாபைத் தாக்கிய மிக மோசமான வெள்ளப் பேரழிவுகளில் ஒன்றாகும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகபட்சமாக பதான்கோட் மாவட்டத்தில், 2.56 இலட்சத்திற்கும் அதிகமான பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை, மாநிலம் முழுவதும் 15,688 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த வெள்ளம் 1,044 கிராமங்களை பாதித்துள்ளது. வெள்ளத்தால் மொத்தம் 2,56,107 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல மாவட்டங்களில் மொத்தம் 96,061 ஹெக்டேர் விவசாய நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் தேசிய, மாநில பேரிடர் மீட்பு படையினர் மற்றும் இராணுவத்தினர் 24 மணி நேரமும் களத்தில் வேலை செய்து வருகின்றனர். பதன்கோட், குர்தாஸ்பூர், அமிர்தசரஸ், பெரோஸ்பூர், பாசில்கா மற்றும் பதிண்டா மாவட்டங்களில் மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

இதேவேளை, வெளிநாட்டு பயணத்தை முடித்து டில்லி திரும்பிய பிரதமர் மோடி, பஞ்சாப் முதல்வருடன் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியுள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள், சேத விவரம், மீட்பு நடவடிக்கைகள் குறித்து பிரதமர் கேட்டறிந்தார். அவர் மீட்புப் பணிகளுக்கு மத்திய அரசு துணை நிற்கும் என உறுதி அளித்துள்ளார்.



புதுடெல்லி

இந்தியாவில் தயாரிக்கப்படும்

## ‘சிப்’ உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும்



“இந்தியாவில் தயாரிக்கப்படும் மிகச்சிறிய ‘சிப்’ (Chip) உலகில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்” என பிரதமர் மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி பேசியதாவது, நான் ஜப்பான் மற்றும் சீனாவுக்கு சென்றுவிட்டு திங்கட்கிழமை (01) இரவு தான் திரும்பி வந்தேன். அடுத்த தலைமுறை சீர்திருத்தங்களை விரைவில் தொடங்குவோம். இந்தியா அரிய கனிமங்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய உறுதிபூண்டுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் மிகச்சிறிய சிப் உலகில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இதற்கான நாள் வெகு தொலைவில் இல்லை. செமிகண்டக்டர் திட்டங்களில் 18 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளது. உலகம் இந்தியாவை நம்புகிறது.

கடுமையான சவால்கள் இருந்த போதிலும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.8 சதவீதம் வளர்ச்சி அடைந்து உள்ளது. 2023ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இந்த துறையில் இந்தியாவின் வளர்ச்சியை உலகம் உன்னிப்பாக கவனிக்கிறது என்றார்.

காபூல்

ஆப்கன் நிலநடுக்கம்

# உதவி கோரும் தலிபான் அரசு

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில், இடிபாடுகளில் யாரேனும் உயிருடன் சிக்கியிருக்கிறார்களா என்று தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன், மக்களுக்கு உதவ வெளிநாடுகள் முன்வர வேண்டும் என்று தலிபான் அரசு கோரிக்கை விடுத்துள்ளள்ளது.



ஆப்கானிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் நிகழ்ந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 800 பேர் உயிரிழந்துள்ளனர். 4,500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஏராளமான கிராமங்கள் உருக்குலைந்து போயிருக்கிறது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமப் பகுதிகளிலிருந்து, காயமடைந்தவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்ல ஹெலிகொப்டர்கள் குழு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பல கிராமங்கள், மலைப் பகுதியில் அமைந்திருப்பதால், மீட்புப் படையினரை செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பல சாலைகள் கட்டட இடிபாடுகளால் மூடப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பல கிராமங்கள் மிகவும் பிற்போக்குத்தனத்தை பின்பற்றும் சமுதாய மக்களைக் கொண்டது என்பதால், அங்குள்ள கலாசார தடைகளால் பெண்களும் சிறுமிகளும் மருத்துவமனைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், ஏற்கெனவே ஆப்கானிஸ்தானில் இருக்கும் மருத்துவமனைகளில் நோயாளிகள் அதிகம் பேர் இருப்பார்கள் என்ற நிலையில், ஆயிரக்கணக்கானோர் காயத்துடன் மருத்துவமனைக்கு வரும்போது, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாமல் பல மருத்துவமனைகள் திணறி வருகின்றன. ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா உள்ளிட்ட, பல உலக நாடுகளிலிருந்தும் நிவாரண பொருள்கள் சென்று கொண்டிருக்கின்றன.

குனார் மற்றும் நாங்கர்ஹார் மாகாணங்களில் நிலநடுக்கத்தின் பாதிப்பு கடுமையாக உள்ளது. நாங்கர்ஹார் மாகாணத்தில் உள்ள ஜலாலாபாத் நகரின் கிழக்கு-வடகிழக்கே 27 கி.மீ. தொலைவில், பூமிக்கு அடியில் 8 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று ஆரம்பிக்கிறது இருபதுக்கு-20 தொடர்:

# இலங்கையை வெல்லுமா சிம்பாப்வே?

சிம்பாப்வே, இலங்கை அணிகளுக்கிடையிலான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரானது ஹராரேயில் இன்று புதன்கிழமை (3) மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இறுதி வரை சிம்பாப்வே போராடிய நிலையில் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் குறிப்பிடத்தக்களவு சவாலையளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசியக் கிண்ணத் தொடருக்கு சிறந்த தயார்படுத்தலாக இத்தொடர் இலங்கை காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், நுவனிடு பெர்ணாண்டோ, கமில் மிஷாரவுக்கு வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகத்துக்கிடமானதாக காணப்படுகின்றது.

இதேவேளை துடுப்பாட்டம் காரணமாக வியாஸ்காந்துக்கு முன்னதாக வாய்ப்புப் பெற்ற துஷான் ஹேமந்தவும் தன்னை நிரூப்பித்துக்காட்ட வேண்டியுள்ளார்.



தேசிய உதைபந்தாட்ட அணிக்கு

## மன்னார் வீரர்கள் இருவர் தெரிவு



எஸ்.ஆர்.லெம்பேட்

இலங்கை 16 வயது கீழ் உதைபந்தாட்ட தேசிய அணியில் மாணவர்களை உள்வாங்குவதற்கு நடைபெற்ற தேர்வில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவாகி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களான என். கெஸ்ேரான், கே.ஜெனிஸ்ரன் ஆகியோர் குறித்த தெரிவில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி திறமையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

குறித்த இரு மாணவர்களும் கலந்து கொள்ளும் முதலாவது சர்வதேச உதைபந்தாட்ட போட்டியானது சீனாவில் இம் மாதம் 20ம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப் போட்டி “ U16 Tainyu Liufang Cup- 2025” ற்கான போட்டியாகும். இதற்கான மேலதிக பயிற்சிகள் இம் மாதம் 4ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மாணவர்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் இருந்து தமது கல்வியை மேற்கொள்கின்றார்கள் என்பதன் அடிப்படையில் குறித்த மாணவர்களுக்கு உதவி செய்ய விரும்புவோர் அதிபர் ஊடாக உங்கள் உதவிகளை வழங்கி அந்த மாணவர்களின் திறமைக்கான அங்கீகாரம் பெறுவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

இம் மாணவர்களது மேலதிக பயிற்சிக்கான செலவையும், அவர்கள் சீனாவில் இருக்கும் போது ஏற்பட உள்ள மேலதிக செலவையும் தாங்கிக் கொள்வதற்கான பண வசதி இல்லாத சூழ்நிலையில் தற்போது இருக்கிறார்கள்.

எனவே, இம் மாணவர்களை ஊக்கப்படுத்தி தேசிய மட்ட அணியில் ஒருவராக விளையாடுவதற்கு தங்களால் இயன்ற நிதி உதவியை வழங்கி உதவுமாறு பாடசாலை சமூகம் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மருதமுனை ஈஸ்டர்ன் யூத்துக்கு காலணிகள்

ஏ.எல்.எம்.ஷினாஸ்

மருதமுனை ஈஸ்டர்ன் யூத் விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு தொகுதி காலணிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு மருதமுனையில் ஞாயிற்றுக்கிழமை (31) அன்று இடம்பெற்றது.

ஈஸ்டர்ன் விளையாட்டு கழகத்தின் பேரபிமானியும் முன்னாள் கழகத்தின் கோல் காப்பாளராகவும் வீரராகவும் விளையாடிய கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஏ.எம்.எம்.அன்சார் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கழகத்திற்கு தேவையான ஒரு தொகுதி காலணிகளை அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

இங்கு உரையாற்றிய அன்சார், “தற்போது என்னால் ஒரு சிறிய அளவிலான உதவி மாத்திரமே கழகத்துக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முடியுமான அளவு கழகத்திற்கு பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். எமது விளையாட்டு கழகம் கிழக்கில் பழம் பெரும் கழகங்களில் ஒன்றாகும். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சுற்றுப்போட்டி மற்றும் எதிர்காலங்களில் நடைபெற இருக்கின்ற சுற்றுப்போட்டிகளிலும் நமது கழகம் சிறப்பாக விளையாடி வெற்றியை தம்பசப்படுத்த வேண்டும்” என்று கூறினார்.

இருபதுக்கு–20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து

## ஸ்டார்க் ஓய்வு

அவுஸ்ரேலியாவின் அடுத்தாண்டு இறுதியிலிருந்தான நெருக்கடி மிக்க டெஸ்ட் அட்டவணை, 2027 ஒருநாள் சர்வதேசப் போட்டி உலகக் கிண்ணத் தொடருக்கும் முன்னுரிமை அளிக்கும் பொருட்டு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 35 வயதான ஸ்டார்க் 65 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலில் 79 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன், 2021ஆம் ஆண்டு இருபதுக்கு-20 உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான தொடருக்கான

## அவுஸ்திரேலியக் குழாமில் ஸ்டொய்னிஸ்

நியூசிலாந்துக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில் மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் இடம்பெற்றுள்ளார். ஸ்டொய்னிஸ் தவிர காயத்திலிருந்து குணமடைந்த மிற்செல் ஓவன், மத்தியூ ஷோர்ட், ஸ்கேவியர் பார்ட்லெட் ஆகியோரும் காயத்திலிருந்து குணமடைந்து குழாமுக்குத் திரும்பியுள்ளனர்.



இதேவேளை ஆஷஸ் தொடருக்குத் தயாராகும் பொருட்டு முதற்தரப் போட்டிகளுக்கு முன்னுரிமையளிக்கும் பொருட்டு இத்தொடரை சகலதுறைவீரர் கமரன் கிறீன் தவறவிடவுள்ளார். முதற் குழந்தை பிறப்பதன் காரணமாக நாதன் எலிஸும் இத்தொடரில் பங்கேற்கவில்லை.

குழாம்: மிற்செல் மார்ஷ் (அணித்தலைவர்), ஷோன் அபொட், ஸ்கேவியர் பார்ட்லெட், டிம் டேவிட், பென் டுவார்ஷுஸ், ஜொஷ் ஹேசில்வூட், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ், மற் கூனுமென், கிளென் மக்ஸ்வெல், மிற்செல் ஓவன், மத்தியூ ஷோர்ட், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், அடம் ஸாம்பா.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 03, செப்டெம்பர் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.